# சங்க இலக்கியக் கட்டமைப்பில் தொல்காப்பியப் பெண்பால் உயிரினங்கள்

*முனைவர் கி.சங்கர நாராயணன்*
உதவிப் பேராசிரியர்,
தமிழ் மேம்பாட்டுச் சங்கப்பலகைத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005

மலர்: 4
இதழ்: 2
மாதம்: அக்டோபர்
வருடம்: 2019
ISSN: 2454-3993

தொல்காப்பியர் மரபியலில் சுட்டும் பெண்பால் உயிரினங்களின் பதிவுகளைச் சங்க இலக்கியங்கள் வழியாக எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது. தொல்காப்பியம் மரபியலை இளமைப் பெயர்கள், ஆண்பால் பெயர்கள், பெண்பால் பெயர்கள் எனக் கட்டமைக்கிறது. இவற்றில் பெண்பால் பெயர் பெறும் உயிரினங்களைப் பின்வரும் நூற்பா விளக்குகிறது.

**பேடையும் பெடையும் பெட்டையும் பெண்ணும்**
**மூடும் நாகும் கடமையும் அளகும்**
**மந்தியும் பாட்டியும் பிணையும் பிணவும்**
**அந்தம் சான்ற பிடியொடு பெண்ணே**
**(தொல்.பொருள்.மரபு.1502)**

**பேடை பேடையும் பெடையும் நாடின் ஒற்றும் (தொல்.1554)**

பேடை, பெடை என்பன பெட்டை என்ற பெயர் போலப் பறவை இனத்துக்குப் பொருந்தும். பேடை என்பது பறவையின் பெண்பால் பெயராகும். சங்க இலக்கியத்தில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகையில் பேடை குறித்தப் பதிவுகளைக் காணமுடிகின்றது.

**காமரு தகைய கான வாரணம்**
**பெயல் நீர் போகிய வியல் நெடும் புறவில்**
**புலரா ஈர் மணல் மலிர கெண்டி**
**நாள்இரை கவர மாட்டி தன்**
**பேடை நோக்கிய பெரும் தகு நிலையே (நற் 21)**

தேர்ப்பாகனே! நீ இதுவரையில் குதிரைகளை ஒட்டச் சாட்டைமுள்ளைப் பயன்படுத்தியது இல்லை. இப்போது அதனைப் பயன்படுத்திக் குதிரைகளை விரைந்து ஒட்டுக.விரைவில் இல்லாளை அடையவேண்டும் என்கிறான் தலைவன் தேர்ப்பாகனிடம்.

மழை பெய்து நின்ற பிறகு முல்லை நிலத்தில் ஈரமண்ணைக் கிண்டிய காட்டுக்கோழியானது இரையை வாயில் வைத்துக்கொண்டு தன் பெண் கோழியைப் பார்க்கிறது. அந்தக் கோழி இங்கே இரை இருக்கிறது என்று தன் பெண்கோழிக்குக் காட்டியதாம் அந்த ஆண்கோழி.

**மனை உறை புறவின் செம் கால் பேடை**

**(நற்.162)**

**கொடு வாய் பேடை குடம்பை சேரிய**
**உயிர் செல கடைஇ புணர் துணை**
**பயிர்தல் ஆனா பைதல் அம் குருகே**

**(நற்.338)**

**மனை உறை கோழி குறும் கால் பேடை**

**(குறு.139)**

**நீர் உறை கோழி நீல சேவல்**
**கூர் உகிர் பேடை வயாஅம் ஊர**

**(ஐங்.51)**

**மென் நடை பேடை துனைதர தன் சேர்ந்த**
**அன்ன வான் சேவல் புணர்ச்சி போல்**

**(கலி.147)**

**கொடு வாய் பேடைக்கு அல்குஇரை தரீஇய**
**மான்று வேட்டு எழுந்த செம் செவி எருவை**

**(அகம்.3)**

## பெடை

**மணி நிற மலர் பொய்கை மகிழ்ந்து ஆடும் அன்னம் தன்**
**அணி மிகு சேவலை அகல் அடை மறைத்து என**
**கதுமென காணாது கலங்கி அ மட பெடை**
**மதி நிழல் நீருள் கண்டு அது என உவந்து ஓடி**

**(கலி.70)**

தாமரை பூத்திருக்கும் நீலநிற நீர் கொண்ட பொய்கை. அதில் ஆண் பெண் அன்னங்கள் மகிழ்ந்து விளையாடின. அப்போது ஆண் அன்னமாகிய சேவலைத் திடீர் எனக் காணாமல், தாமாரை இலை மறைத்துக்கொண்டதாகப் பெண் அன்னம் எண்ணிக் கலக்கத்துடன் தேடியது. அப்போது நிலாவின் நிழலை நீரில் கண்டது. அதனைத் தன் சேவல் என்று எண்ணி அதனிடம் ஓடிற்று. அந்த நிலா, நிழலாகிய அன்னம் தன்னை தன்னை அணைக்க வருவதாக எண்ணிக்கொண்டு நாணிக்கொண்டு பல பூக்களுக்கு இடையில் மறைந்துகொண்டது. இப்படி மறைந்து கொள்ளும் பழனம் இருக்கும் ஊரினை உடையவனே, கேள் என்கிறாள் தோழி.

**புன் புறா வீழ் பெடை பயிரும்**

**(நற்.314)**

**பழன கம்புள் பயிர் பெடை அகவும்**

**(ஐங்.60)**

**புன் புற எருவை பெடை புணர் சேவல்**

**(பதிற்று.36)**

**பருந்து பெடை பயிரும் பாழ் நாட்டு ஆங்கண்**

**(அகம்.117)**

**கோழி வய பெடை இரிய**

**(திருமுரு.311)**

**பெடை மயில் உருவின் பெரும் தகு பாடினி**

**(பொரு.47)**

## பிடி

பிடி என்பது பெண் யானையைக் குறிக்கும். இதனைத் தொல்காப்பியர் பின்வரும் நூற்பா வழியாக விளக்குகிறார்.

**பிடி என் பெண் பெயர் யானை மேற்றே**

**(தொல்.1551)**

பெண் யானையின் நீண்டு தொங்கும் பெரிய துதிக்கை இரண்டு இணைந்தன போன்ற ஒன்றித் திரண்ட தொடைகள் எனக் கேசாதிபாத வருணனையில் அமையும் பாடினி குறித்த பாடல் வரி பின்வருமாறு,

**இரும் பிடி தட கையின் செறிந்து திரள் குறங்கின்**

**(பொரு.40)**

## அளகு

**கோழி கூகை ஆயிரண்டு அல்லவை**
**சூழும் காலை அளகு எனல் அமையா**

**(தொல்.1555)**

அளகு எனும் பெண்பெயர் கோழி, கூகை இரண்டுக்கு மட்டும் வரும் என்கிறார் தொல்காப்பியர். பெடையையுடைய சேவல் பருந்தினம் இரையை உண்ணுவதைப்

பதிற்றுப்பத்து பாடல் வழியாக அறியமுடிகின்றது.

**அளகு உடை சேவல் கிளை புகா ஆர**
**(பதிற்று.35)**

**மனை வாழ் அளகின் வாட்டொடும் பெறுகுவிர்**
**(பெரும்.256)**

**பிணை**

**புல்வாய் நவ்வி உழையே கவரி**
**சொல்வாய் நாடின் பிணை எனப்படுமே**
**(தொல்.1557)**

பிணை என்னும் பெண்பாற்பெயர் புல்வாய், நவ்வி, உழை, கவரி எனும் மான்வகைக்கு உரியதாகும்.

**மட பிணை தழீஇய மா எருத்து இரலை**
**(நற்.256)**

தன்னுடைய இளம் பெண்மானைத் தழுவிய பெரிய பிடரியைக் கொண்ட ஆண்மான் என்ற பொருளுடைய இவ்வரியானது நற்றிணையில் காணக்கிடக்கிறது.

**பிணவு**

**பன்றி புல்வாய் நாய் என மூன்றும்**
**ஒன்றிய என்ப பிணவின் பெயர்க் கொடை**
**(தொல்.1558)**

பிணவு என்பது பன்றி, புல்வாய், நாய் எனும் மூன்றுக்கும் பொருந்தும்.

**குவி அடி வெருகின் பைங்கண் ஏற்றை**
**ஊன் நசை பிணவின் உயங்கு பசி களை இயர்**
**- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -**
**------------------------**
**நெற்றி சேவல் அற்றம் பார்க்கும்**
**(அகம்.367)**

குவிந்த அடியினையுடைய காட்டுப் பூனையின் பசிய கண்களையுடைய ஆண் ஊனை விரும்பியுள்ள பெண்பூனையின் வருத்தும் பசியினை நீக்கும் என்று பொருள் தரும் இவ்வரிகளின் வாயிலாகப் பிணவு என்பதற்குக் காட்டுப்பூனை என்ற பொருளை அறியமுடிகின்றது.

**இருள் துணிந்து அன்ன குவவு மயிர் குருளை**
**தோல் முலை பிணவொடு திளைக்கும்**
**(அகம் 201)**

பெரிய கையினையும் பிளந்த வாயினையும் உடைய ஆண்கரடி இருளைத் துணிந்து வைத்தாற்போன்ற திரண்ட மயிரினையுடைய குட்டியுடன் திரங்கிய முலையினையுடைய பெண்கரடியுடன் மகிழ்ந்திருக்கும் என்பதன் வாயிலாகப் பிணவு என்பதற்குப் பெண்கரடி என்ற பொருளைக் காணமுடிகின்றது.

**வள் எயிற்று செந்நாய் வயவு உறு பிணவிற்கு**
**கள்ளி அம் கடத்து இடை கேழல் பார்க்கும்**
**(ஐங்.323)**

கூர்மையான பற்களைக் கொண்ட செந்நாயானது, தன் சூல்கால விருப்பம் கொண்டிருக்கும் பெட்டைக்காகக் கள்ளிகள் நிறைந்த அழகிய காட்டு வழியிடையே காட்டுப்பன்றியை எதிர்பார்த்திருக்கும் என்பதன் வாயிலாக ஐங்குறுநூறு இப்பாடலில் சுட்டும் பிணவு என்பதற்குச் பெண்செந்நாய் என்பதை அறியமுடிகின்றது.

நற்றிணையின் பின்வரும் வரிகளின் வாயிலாகப் பிணவு என்பதற்குப் பெண் புலி என்ற பொருளினை ஏற்க முடிகின்றது.

**கல் அளை செறிந்த வள் உகிர் பிணவின்**
**இன் புனிற்று இடும்பை தீர சினம் சிறந்து**
**செம் கண் இரும் புலி கோள் வல் ஏற்றை**
**உயர் மருப்பு ஒருத்தல் புகர் முகம் பாயும்**
**( நற்.148)**

பரிபாடல் வரிகளின் வாயிலாகப் பிணவு என்பதற்குப் பெண் யானை என்றும், மலைபடுகடாம் வரிகளின் வாயிலாகப் பிணவு என்பதற்குப் பெண்வேட்டை நாய் என்றும் பொருள் கொள்ளமுடிகின்றது.

**மிக வரினும் மீது இனிய வேழ பிணவும்**
**அகவரும் பாண்டியும் அத்திரியும் ஆய் மா**
**(பரி.10)**

**முளவுமா தொலைச்சிய பைம் நிண பிளவை**
**பிணவு நாய் முடுக்கிய தடியொடு விரைஇ**
**(மலை .176-177)**

பிணவு என்பதற்கு வீட்டுப் பெண்பன்றி என்ற பொருளும் உண்டு என்பதைப் பெரும்பாணாற்றுப்படையின் பின்வரும் வரிகள் வழியாகத் தெரிய முடிகின்றது.

**ஈர் சேறு ஆடிய இரும் பல் குட்டி**
**பல் மயிர் பிணவொடு பாயம் போகாது**
**நெல்மா வல்சி தீற்றி பல் நாள்**
**குழி நிறுத்து ஓம்பிய குறும் தாள் ஏற்றை**
**(பெரும் .341-344)**

**பிணவல்**

**பிணவல் எனினும் அவற்றின் மேற்றே**
**(தொல்.1559)**

பிணவல் என்பதும் முற்கூறிய பன்றி புல்வாய் நாய்க்கு உரியதே. பிணவு, பிணவல் எனப்பட்டது என்பர்.

**நால் முலை பிணவல் சொலிய கான் ஒழிந்து**
**அரும் புழை முடுக்கர் ஆள் குறித்து நின்ற**
**தறுகண் பன்றி (அகம்.248)**

அஞ்சாமையினையுடைய வீரப் பன்றி என்ற பொருளில் இங்கு பிணவல் என்ற சொல் எடுத்தாளப்பட்டுள்ளது.

**பெண், பிணா (பிணவு)**

**பெண்ணும் பிணாவும் மக்கட்கு உரிய**
**(தொல்.1561)**

உயர்திணை மக்களுக்குப் பெண், பினா என்ற இரண்டு பெயர்களும் உண்டு என்று, உயிரினங்களின் பெயர்கள் உயர்திணைக்கு அமைந்துள்ளமையினை இங்கு சுட்டுவது கவனிக்கத்தக்கது.

**குறபிணாகொடியை கூடியோய் வாழ்த்து**
**சிறப்பு உணா கேட்டி செவி (பரி.19)**

குறப்பெண்ணாகிய பூங்கொடி போன்றவளை மணந்தவனே! என்று கூறப்படுவதன் மூலம் இங்கு பிணா என்பது பெண்ணைக் குறிப்பதாக உள்ளது.

**நாகு**

**எருமையும் மரையும் பெற்றமும் நாகே**
**(தொல்.1562)**
**நீர் வாழ் சாதியுள் நந்தும் நாகே**
**(தொல்.1563)**

நாகு எனும் பெண்பாற் பெயர் எருமை, மரைஆ, பெற்றம் என்ற மூன்றனுக்கும் வழங்கும். மேலும் நீரில் வாழும் உயிரின வகையுள் நந்தும் நாகு எனப்படும் என்கிறது தொல்காப்பியம்.

**கணை கோட்டு வாளை கமம் சூல் மட நாகு**
**(குறு.164)**
**நல் ஏறு தழீஇ நாகு பெயர் காலை**
**(ஐங்.445)**
**மட கண் எருமை மாண் நாகு தழீஇ**
**(அகம்.146)**
**எருமை நல் ஆன் கரு நாகு பெறூஉம்**
**(பெரும்.165)**

நாகு என்பதற்குக் குறுந்தொகையானது பெண் வாளைமீன் என்றும், ஐங்குறுநூறு இளம் பெண் பசுக்கள் என்றும், அகநானூறு பெண் எருமை என்றும், பெரும்பாணாற்றுப்படை இளமையான பெண் எருமை என்றும் பொருள் கொள்கின்றன.

**மந்தி**

**குரங்கும் முசுவும் ஊகமும் மந்தி**
**(தொல்.1567)**

மந்தி எனும் பெண்பெயர் குரங்குக்கும் அதன் வகைமையான முசுவுக்கும் ஊகத்திற்கும் வழங்கப்பெறும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

**மன்றப் பலவின் மாச்சினை மந்தி**
**இரவலர் நாற்றிய விசிகூடு முழவின்**
**பாடின் தெண்கண், கனி செத்து, அடிப்பின்,**
**அன்னச் சேவல் மாறு எழுந்து ஆலும்,**
**கழல் தொடி ஆஅய் மழை தவழ் பொதியில்;**
**ஆடு மகள் குறுகின் அல்லது,**
**பீடுகெழு மன்னர் குறுகலோ அரிதே**
**(புறம்.128)**

ஆய் பொதியில் நாட்டு அரசன். அந்நாட்டில் பொருள் பெற்றுவரச் செல்வோர் விசித்துக் கட்டிய தம் முழவுப் பறையை அந்நாட்டும் பலா மரங்களில் தொங்கவிடுவர். அதனை அங்குள்ள குரங்கு முழக்கும்போது அங்குள்ள அன்னங்களின் ஆண் பறவைகள் எழுச்சி பெற்று ஆடும் என்ற செய்தியைப் புறநானூற்றின் வழியாக அறியமுடிகின்றது.

தொல்காப்பியம் மரபியலில் சுட்டிய பெண்பால் உயிரினங்களின் பெயர்களில் பெட்டை, மூடு, கடமை, பாட்டி ஆகிய சொற்களைத் தவிர மற்ற சொற்கள் அனைத்தும் சங்க இலக்கியங்களில் பயின்று வந்துள்ளமைக்கான சான்றுகளைக் கண்டோம். தொல்காப்பியம் சுட்டும் பெட்டை என்ற சொல்லைச் சங்க இலக்கியத்தில் காணமுடியவில்லை. மேலும் பெண் ஆட்டினைக் குறிக்கும் மூடு, கடமை ஆகிய சொற்களும் வழக்கத்தில் இல்லை என்பது பேராசிரியரின் கூற்றாகும். பாட்டி என்ற சொல்லும் சங்க இலக்கியத்தில் தொல்காப்பியம் குறிப்பிடும் பொருளில் இல்லை, மாறாக மீன்பிடிக்கும் பாண்மகளையும், விறலியையும், வயதான பெண்ணையும் குறிப்பதாக அமைந்துள்ளது.

தொல்காப்பியம் சுட்டிய மரபியல் சார்ந்த பெயர்களில் மேலே குறிப்பிட்ட மூன்று பெயர்கள் சங்க இலக்கியத்தில் இல்லாமல் போய்விட்டது. காலமாற்றத் தினாலும் வளர்ச்சியினாலும் இன்று ஒவ்வொரு உயிரினத்தைக் குறிக்க ஒரே ஒரு பெயர் மட்டும் வழக்கத்தில் உள்ளது. அதிலும் தொல்காப்பியம் சுட்டிய பெயர்களில் அப்படியே எடுத்தாளப்பட்டு, இன்று நம்மிடம் பயன்படுத்தும் பெயர்களைக் கணக்கிட்டால் விடை என்னவாக இருக்கும் என்பது நாம் அறிந்ததே. தமிழ்மொழியின் அழியாத செல்வம் தமிழின் கலைச்சொற்களே. இச்சொற்களைப் புறக்கணித்துவிட்டு வாழ்வது எவ்விதத்தில் நியாயம் என்பது தெரியவில்லை. தொல்காப்பியர் சுட்டிய மரபியல் பெயர்களை இன்றைய காலத்தில் கூறினால் கூட இது என்ன புதியதாக இருக்கிறது என்ற எதிர்நிலையான கருத்து நம்மை வந்தடையும் என்பதில் சந்தேகமில்லை. தொல்காப்பியர் சுட்டிய பெண்பால் உயிரினங்களின் பெயர்களை மட்டும் இக்கட்டுரை எடுத்துக்காட்டியுள்ளது. தொல்காப்பிய மரபியல் சுட்டும் பெயர்கள் அனைத்தையும் தமிழ் இலக்கியங்களில் பொருத்திப் பார்த்து அதன் இன்றைய நிலைகளை அறிந்து கொள்வதற்கான நகர்வாக இக்கட்டுரை அமையும்.

## துணைநின்ற நூற்கள்

1. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, 2014, நியூசெஞ்சுரி புத்தக நிலையம், சென்னை
2. சங்க இலக்கியம், பத்துப்பாட்டு, 2014, நியூசெஞ்சுரி புத்தக நிலையம், சென்னை